பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 09 2024 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப்பணிகளில் தனியார் நிறுவனங்களும் பங்கேற்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. குரங்கம்மை பரவலை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

3. பக்ரைன் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்தை சேர்ந்த 28 மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. லெபனான் மீது இஸ்ரேல் அண்மையில் நடத்திய தாக்குதல்களில் 600-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

5. **Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*-- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப்பணிகளில் தனியார் நிறுவனங்களும் பங்கேற்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் **CSIR** நிறுவன தின நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

விஞ்ஞானிகள் தங்களது திறனை முழுமையாக வெளிப்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கான சூழ்நிலையை மத்திய அரசு ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதில் பிரதமர் திரு நரேந்திர மோடி தனிகவனம் செலுத்தி வருவதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

<<<<<<>>>>>

சாலை கட்டுமானப்பணிகளில் புதுமை தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

இன்று பெங்களூருவில் இதுதொடர்பான சர்வதேச கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

டிஜிட்டல் நிர்வாக கட்டமைப்பு வசதி திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதை விரைவுபடுத்தும் என்று அவர் கூறினார்.

புதுமை கண்டுபிடிப்புகள், திட்டப்பணிகளை விரைவுபடுத்த உதவுவதோடு செலவினங்களையும் குறைக்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்கு சதவீதம் அதிகரித்துள்ளது மத்திய அரசின் சாதனை என்று நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஜம்மு காஷ்மீரில் தற்போதுதான் தேர்தல் அமைதியாக நடைபெற்றதாக கூறினார்.

ஜம்மு காஷ்மீரின் வளர்ச்சிக்காக மத்திய அரசு செயல்படுத்திய திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

இதன் காரணமாக அங்கு செல்லும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டில் மட்டும் 2 கோடிக்கும் மேற்பட்ட சுற்றுலாப்பயணிகள் ஜம்மு காஷ்மீரை பார்வையிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி வெற்றிபெறும் என்றும் திரு கிஷன் ரெட்டி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

எத்தனால் விலையை உயர்த்துவது குறித்து பெட்ரோலிய அமைச்சகம்தான் முடிவு செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக கூறினார்.

பருவமழை முறையாக பெய்ததன் காரணமாக வேளாண் உற்பத்தியும் சீராக இருக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வேளாண் விளைப்பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

ஆறு-ஜி சேவைகளை வழங்குவதில் இந்தியா முன்னணியில் இருக்கும் என்று தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இன்று பெங்களூருவில் ஆறு-ஜி சேவை தொடர்பான பணிக்குழு கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தொலைபேசி துறையை பொறுத்தவரை உலகின் மிகப்பெரிய சந்தையாக இந்தியா திகழ்கிறது என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

காங்கிரஸ், பிரிவினைவாத சக்திகளுக்கு ஊக்கம் அளிப்பதாக பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புவனேஷ்வரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒருமைப்பாட்டிற்காக பாடுபடும் கட்சியாக பிஜேபி திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

பிஜேபி-யில் ஆறாண்டுகளுக்கு ஒருமுறை உறுப்பினர் புதுப்பித்தல் மற்றும் சேர்க்கை நடைபெறுவதாகவும் திரு நட்டா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

குரங்கம்மை பரவலை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக சுகாதாரத்துறை செயலர் திரு அபூர்வ சந்திரா, மாநிலங்களின் தலைமைச்செயலர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்த நோய் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் அதில் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்கள் அச்சம் கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுபவர்களை தனிமைப்படுத்தி கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

குரங்கம்மை பாதிப்பை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் திரு அபூர்வ சந்திரா அந்த கடிதத்தில் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

தில்லி சட்டப்பேரவையின் இரண்டு நாள் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

பேரவை கூடியதும் கட்சித்தாவல் தடுப்புச்சட்டத்தின்கீழ், ஆம் ஆத்மி கட்சி உறுப்பினர்கள் திரு **Kartar Singh Tanwar** மற்றும் திரு ராஜ்குமார் ஆனந்த் தகுதி நீக்கம் செய்யப்படுவதாக அவைத்தலைவர் திரு **Ram Niwas Goel** அறிவித்தார்.

முன்னதாக, தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை குறித்து விவாதிக்க வேண்டும் என்று பிஜேபி உறுப்பினர்கள் கோரினர்.

இதற்கு பேரவைத் தலைவர் அனுமதி மறுத்தார்.

இதன் காரணமாக, நிலவிய கூச்சல், குழப்பம் காரணமாக பிஜேபி உறுப்பினர்கள் அவைக்காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பேரவைத் தலைவர் அலுவலக வாயில்முன் பிஜேபி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

<<<<<<>>>>>

பிரதமராக திரு நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்த

சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

அரசியல் விமர்சகர் திரு ரவிச்சந்திரன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் இரண்டாம் பகுதி இன்றிரவு மணி 9.15-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

<<<<<<>>>>>

பக்ரைன் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகத்தை சேர்ந்த 28 மீனவர்களை விரைவில் விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் இடிந்தகரை கிராமத்தை சேர்ந்த 28 மீனவர்கள் ஈரான் நாட்டிற்கு சென்று மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்தபோது அங்கு எல்லை தாண்டி சென்றதாக கூறி, பக்ரைன் கடலோர காவல்

படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தூய்மையே சேவை இயக்கத்தின்கீழ், நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் தூய்மைப்பணியாளர்கள் மக்கும் மற்றும் மக்கா குப்பைகளை பிரிப்பது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்த இயக்கத்தின்கீழ் இப்பணிகளை மேற்கொள்வது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக தூய்மைப்பணியாளர்கள் தெரிவித்தனர்.

*(வாய்ஸ் பைட் - தூய்மைப்பணியாளர்கள் - 46 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

கர்நாடகாவில் சிபிஐ விசாரணை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட ஒப்புதலை அம்மாநில அரசு விலக்கிக்கொண்டுள்ளது.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில சட்ட அமைச்சர் திரு ஹெச் கே பாட்டீல், சிபிஐ பாரபட்சமாக செயல்படுவதாக குறை கூறினார்.

பல்வேறு வழக்குகளை விசாரிக்குமாறு அரசு அளித்த பரிந்துரைகளை சிபிஐ ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

இதனை கருத்தில்கொண்டே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு ஹெச் கே பாட்டீல் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

லெபனான் மீது இஸ்ரேல் அண்மையில் நடத்திய தாக்குல்களில் 600-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

லெபனானில் உள்ள **Hezbollah** தீவிரவாத அமைப்பை குறிவைத்து இஸ்ரேல் இந்த தாக்குதல்களை நடத்திவருகிறது.

இதற்கிடையே, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் அதன் நட்பு நாடுகள் இஸ்ரேல் - லெபனான் இடையே 21 நாள் சண்டை நிறுத்தம் உடனே அறிவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

இருப்பினும், லெபனானில் உள்ள தீவிரவாத அமைப்புகளுக்கு எதிரான தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Macau** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-13, 21-18 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Ayush Shetty** —ஐ வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

புதுச்சேரியில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா ஏழு ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

---------------

பாங்காக்கில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஜப்பானின் **Toshihide Matsui** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்தியாவின் **Arjun Kadhe - Rithvik Choudary Bollipalli** இணையும் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

**<<<<<<END>>>>>**